**02.02.2026 CC 100/2019 PW1. ராமச்சந்திரன்**

கடந்த 22.09.2025ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருந்த நிலையில் இந்நீதிமன்ற M.P. 08/2025, dated 27.10.2025ன் படி கு.வி.மு.ச 1973பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 02.02.2026.**

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை

குற்றம் சுமத்தப்பட்டவர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்

1. இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் இருவரும் எனது உடன் பிறந்த சகோதரர்கள் என்றால், சரிதான். நான் புகாரில் கண்டால் தெரியும் வேறு சில நபர்கள் என்று சொல்லியுள்ள நபர்கள் இன்று வரை தெரியவில்லை என்றால், சரிதான். திருடப்பட்ட மரத்தை குறித்து அளவுகள் மற்றும் நிறத்தை குறித்து புகார்மனுவில் குறிப்பிடவில்லை என்றால், சரிதான்.

2. புகார்மனுவில் திருடப்பட்ட மரம் எந்த திசை மற்றும் எந்த இடத்தில் இருந்தது என்று குறிப்பிடவில்லை என்றால், எனது சொத்தில் நின்ற மரம் என்று குறிப்பிட்டிருந்தேன். நான் புகார்மனுவில் எந்த வகை மரத்தை வெட்டினார்கள் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால், சரியல்ல. மாஞ்சி மரம் என்று குறிப்பிட்டிருப்பேன்.

3. உண்மையில் மரம் திருடப்படவில்லை என்பதால் தான் நான் அந்த மரத்தை புகார்மனுவில் கூறவில்லை என்றால், சரியல்ல. மரம் திருடப்பட்ட சொத்தின் மீது உரிமையியல் வழக்கு நடைபெற்றது என்றால், சரிதான். மேற்படி சொத்தானது எங்கள் குடும்பச் சொத்து என்றால், சரிதான். நான் அப்பொழுது அதனை அம்மாவிடம் இருந்து விலைக்கு வாங்கியிருந்தேன்.

4. உரிமையியல் வழக்கானது பாகப்பிரிவினை வழக்கு என்றால், சரிதான். பாகப்பிரிவினை வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களும் தரப்பினராக இருந்தார்களா என்றால், குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தான் அதில் வாதியாக இருந்தார்கள். மேற்படி உரிமையியல் வழக்கானது குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு சாதகமாக தீர்ப்பானது என்றால், சரியல்ல.

5. மரங்கள் திருடு போன நிலமானது எனது நிலம் என்பதை நிரூபணம் செய்வதற்கு ஆவணத்தை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால், கொடுத்தேன். சம்பவம் நடைபெற்ற பொழுது எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால், நிறைய நபர்கள் இருந்தார்கள். சரியாக ஞாபகம் இல்லை.

6. உண்மையில் சம்பவம் நடைபெறவில்லை என்பதால் தான் நான் அவர்களை சாட்சியாக இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால், சரியல்ல. நான் உடனே பயந்து போய் காவல்நிலையம் சென்று விட்டேன். சம்பவயிடத்தில் இருந்து காவல்நிலையம் எவ்வளவு தூரம் என்றால், 4.5 கி.மீ இருக்கும்.

7. நான் இவ்வழக்கு சம்பவம் சம்மந்தமாக எத்தனை மணிக்கு புகார் கொடுத்தேன் என்றால், காலை 11.00 மணிக்கு புகார் கொடுத்தேன். நான் மரம் திருடு போனது சம்மந்தமான புகைப்படங்களை காவல்நிலையத்தில் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல. நான் கொடுத்தேன். சம்பவயிடத்தை சுற்றி வீடுகள் இல்லை என்றால், சரியல்ல. வீடுகள் உள்ளது. அவர்கள் யாரையும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால், சரிதான்.

8. அசல் வழக்கு எண். 153/2008 என்ற வழக்கு குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு 3ஆயிரம் ரூபாய் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால், தள்ளுபடி செய்யப்பட்டது. ஆனால் தொகை குறித்து எனக்குத் தெரியாது. மொத்த வழக்கு சொத்தானது 90 சென்ட் என்றால், 96 சென்ட்.

9. வழக்கு சொத்தானது குடும்ப சொத்து என்றாலும், அதில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் பாகம் உள்ளது என்றாலும், அதில் நான் மரத்தை வெட்டியதை குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் கேட்டதால் அவர்கள் மீது பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.

**02.02.2026** **CC 100/2019** **PW2. சீனிவாசன்**

கடந்த 22.09.2025ம் தேதி முதல் விசாரணை செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படாமல் இருந்த நிலையில் இந்நீதிமன்ற M.P. 08/2025, dated 27.10.2025ன் படி கு.வி.மு.ச 1973பிரிவு 311ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் மேற்படி சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 02.02.2026.**

குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு குறுக்கு விசாரணை

குற்றம் சுமத்தப்பட்டவர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்

1. இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் இருவரும் எனது உடன் பிறந்த சகோதரர்கள் என்றால், சரிதான். நான் கையெழுத்து போட்ட பார்வை மகசரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்குத் தெரியாது என்றால், சரியல்ல. நான் பார்வை மகசரில் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்துப் போட்டேன் என்றால், சரிதான். அ.சா.1 என்னுடன் பிறந்தவர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.